[1982 செப்டம்பர் 8

(5) முதல் துணை நிதி அறிக்கை 1982—83 அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: *மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

1982-83 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இந்த அவையில் வைக்க முன் வருகிறேன். இந்த துணை மதிப்பீடுகளில் உள்ள மொத்தத் தொகை ரூ. 130.75 கோடியாகும். இதில் ரூ. 124.35 கோடி வருவாய்க் கணக்கிலுள்ளது. 6.40 கோடி மூலதன, கடன் கணக்குகளில் உள்ளது. இந்த மதிப்பீடுகளுடன் வைக்கப்பட்டுள்ள விரிவான விவர அறிக்கை, செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளதன் நோக்கத்தை விளக்குகிறது. மாண்புமிகு மன்ற உறுப்பினர்களின் தனி கவனத்திற்காகக் குறிப்பிட்ட சில முக்கிய இனங்களின் விவரங்களை மட்டும் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

2. இம்மாநிலத்தின் கிராமப் பகுதிகள் அனைத்திலும் முதல் அமைச்சரின் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம் 1982 ஜூலை 1 ஆம் நாளிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருவதை மன்ற உறுப்பினர்கள் அறிவர். 1982-83ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட உரையில் சுட்டிக் காட்டியவாறு இத்திட்டத்தின் கீழ், 2 வயது முதல் 10 வயது வரையுள்ள கிறார்கள் பயனடைகின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் நாள்தோறும், நண்பகலில் சத்து உணவு அளிக்கப்படும். இத் திட்டம் 1982 செப்டம்பர் 15 லிருந்து நகர்ப் பகுதிகளுக்கும் நீட்டிக்கப்படவிருக்கிறது. 2 வயதிலிருந்து 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு உணவளிக்கும் செலவாக ரூ. 32.00 கோடியும், 5 வயதிலிருந்து 9 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு உணவளிக்கும் செலவாக ரூ. 20.59 கோடியும் துணை மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் இத்திட்டத்திற்கு வழங்கும் உணவுப்பொருளுக்கு ஆகும் செலவுக்காக துணை மதிப்பீடுகளில் ரூ. 55.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

3. இம்மாநிலமெங்கும் தன்னிறைவுத் திட்டங்களை இவ்வரசு செயற்படுத்தி வருவதையும், இத் திட்டம் இவ்வாண்டில் மூன்றாவது கட்டத்தை எய்தியுள்ளது என்பதையும் உறுப்பினர்கள் அறிவர். தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொண்ட பணிகள் உரிய காலத்தில் முடிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில், சாலை உருளை இயந்திரங்கள் 50 வாங்க அரசு ரூ. 1.125 கோடி அனுமதித்துள்ளது. தற்போது வைக்கப்பட்டுள்ள துணை மதிப்பீடுகளில் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

---

*நிதி அமைச்சரின் உரையை ஆங்கிலத்தில் 327 ம் பக்கங்களில் காண்க.

4. 1981 ஆம் ஆண்டில் போதிய மழையின்மை காரணமாக ஒரு சில மாவட்டங்களின் சில பகுதிகளில் குடிநீர் கிணறுகளில் நீர் மட்டம் இறங்கிக் கொண்டே வருவதற்கான சாத்தியக்கூறு உள்ளது. இந்நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு தற்போதுள்ள பொது குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக அரசு ரூ. 10 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. இராமேஸ்வரம், மாமல்லபுரம், கன்னியாகுமரி நகரியங்களை, அனைத்து நாட்டு சுற்றுலா மகிழ்விடங்களாக ஒருங்கிணைந்த வகையில் மேம்படுத்துவதற்கான பெருந் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நிதியுதவி வேண்டி இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. நமது வேண்டுகோள் இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்திய அரசிடமிருந்து உதவி கிடைப்பதை எதிர்பார்த்து இவ்வரசு மாமல்லபுரம், இராமேசுவரம், கன்னியாகுமரி நகரியங்களில் கடைகள், கட்டிடத் தொகுதி போக்குவரத்து நிலையம், திறந்த வெளித் திரையரங்கம் முதலிய அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்காக அவற்றுக்கு 50 சதவீத கடன், 50 சதவீத மானிய அடிப்படையில் ரூ. 58 இலட்சம் அனுமதித்துள்ளது. இதில் மானியப் பகுதி தற்போது வைக்கப்பட்டுள்ள துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

6. 1982–83 நிதியாண்டுக்கான வரவு—செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கவியலாத ஒரு சில முக்கிய செலவினங்களை மட்டுமே இப்போது எடுத்துக் கூறியுள்ளேன். துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்கள் அனைத்திற்கும் இசைவளித்து, அவற்றுக்குக் கேட்டுள்ள தொகையை வழங்குமாறு அவையை வேண்டி அமர்கிறேன்.

(6) அறிவிப்புகள்.

(அ) முதல் துணை நிதி அறிக்கை 1982—83 வெட்டுத் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1982-83-ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீது விவாதமும், மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும், 9-9-1982 ஆம் தேதியன்றே எடுத்துக் கொள்வது என்ற அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கிணங்க, வெட்டுத் தீர்மானங்கள் இன்று 8-9-1982 மாலை 3-00 மணிக்குள் பேரவை அலுவலகத்தில் சேர்ப்பிக்க வேண்டும்.